सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

# வரவு - செலவுத் திட்ட உரை

# 2018 - 2019

திரு வே. நாராயணசாமி

மாண்புமிகு முதலமைச்சர்



2 சூலை, 2018

# வரவு - செலவுத் திட்ட உரை

2018 - 2019

**கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க்கு ஒளி -குறள்**

கொடையும், இரக்க குணமும், நீதி தவறாமையும், ஏழ்மையான மக்களைக் காத்தலும் ஆகிய நான்கையும் உடைய வேந்தன் வேந்தர்க்கெல்லாம் ஒளிமிக்க விளக்காவான்.

***மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே !***

**வணக்கம்!**

**நா**ன் 2018-19ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை இந்த மாண்புமிகு அவையின் முன் சமர்ப்பிக்க உள்ளேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு 2018-19ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை, மானியக் கோரிக்கைகள் மற்றும் விளக்கக் குறிப்பு அறிக்கை ஆகியவை வழங்கப்பட உள்ளன. புதுச்சேரி மக்களின் பேராதரவுடனும் மற்றும் அன்புத் தலைவி அன்னை சோனியா காந்தி, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மதிப்புமிகு திரு ராகுல் காந்தி அவர்களின் ஆசியோடும், போற்றுதலுக்குரிய முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் தலைவர் மரியாதைக்குரிய திரு ஸ்டாலின் அவர்களின்

பேராதரவோடும் எனது அரசு ஏழை எளிய மக்களின் நலனுக்காக சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவித்த நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. மேலும், மக்களுக்கான அனைத்து நலத்திட்டங்களும் தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்று உறுதியளிக்கிறேன்.

**2.** 2018-19ஆம் ஆண்டுக்கான மாநில திட்டக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட மொத்த வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ₹ 7,530 கோடி ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். மாநில நிதி ஆதாரங்கள் ₹ 4,570 கோடியாகவும் (61 விழுக்காடு), மத்திய அரசின் நிதி உதவி ₹ 1,476 கோடியாகவும் (25 விழுக்காடு) இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. மத்திய நிதி உதவித் திட்டங்களின்கீழ் (CSS) ₹ 409 கோடி எதிர்பார்க்கப்படுகிறது. மீதமுள்ள பற்றாக்குறையான ₹ 1,050 கோடி (14%) வெளிச்சந்தைக் கடன் மற்றும் மத்திய நிதி நிறுவனங்களின் மூலம் திரட்டப்படும். மொத்த செலவினங்களை "திட்டம் மற்றும் திட்டம் சாராதது" என்ற வகைப்படுத்தும் முறை மத்திய அரசால் நீக்கப்பட்டு, அவை "நடைமுறைச் செலவினங்கள்" மற்றும் "மூலதனச் செலவினங்கள்" என்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில், புதுச்சேரி அரசும், செலவினங்களை "நடைமுறை" மற்றும் "மூலதனம்" என்று 1-4-2018 முதல் வகைப்படுத்தியுள்ளது.

**3.** அரசின் நிதி ஆதாரங்களின் பெரும்பகுதி சம்பளங்கள், ஓய்வூதியம், கடன் சேவை மற்றும் மின்சாரம் வாங்குதல், உள்ளிட்ட பல்வேறு தவிர்க்க முடியாத செலவினங்களுக்காக செலவிடப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். 2018-19 ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான ₹ 7,530 கோடியில், ₹ 1,800 கோடி சம்பளங்களுக்கும் (24 விழுக்காடு), ₹ 875 கோடி ஓய்வூதியங்களுக்கும் (12 விழுக்காடு), ₹ 1,380 கோடி கடன் சேவைகளுக்கும் (18 விழுக்காடு), ₹ 1,200 கோடி மின்சாரம் வாங்குவதற்கும் (16 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசின் மற்ற நலத்திட்டங்கள் மற்றும் முதியோர் ஓய்வூதியம் போன்றவற்றிற்கு ₹ 540 கோடியும் (7 விழுக்காடு), பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியக் கொடையாக (சம்பளங்கள் மற்றும் கொடை) ₹ 762 கோடியும் (10 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.** 2017-18ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இலக்கில் ₹ 6,757 கோடி, அதாவது 95 விழுக்காடு செலவு செய்யப்பட்டது. புதுச்சேரி வரலாற்றிலேயே மத்திய அரசின் நிதி உதவித் திட்டங்களின்கீழ் (CSS), மிக அதிகபட்சமாக 82 விழுக்காடு செலவு செய்யப்பட்டுள்ளது. 2017-2018ல் முந்தைய ஆண்டைவிட அரசு வருவாய் ₹ 505 கோடி (14 விழுக்காடு) அதிகரித்துள்ளது.

**5.** புதுச்சேரி அரசின் தற்போதைய நிதிநிலைமை பற்றிய சில விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்களிடம் பகிர்ந்துகொண்டு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். புதுச்சேரி அரசின் தனிப்பொதுக்கணக்கு 17-12-2007 அன்று தொடங்கப்பட்ட பிறகு, மத்திய அரசு, திட்டங்களுக்கான (Plan loans) கடன் வழங்குவதை நிறுத்திவிட்டது. மாறாக, புதுச்சேரி அரசு வெளிச்சந்தை மற்றும் HUDCO, NABARD மூலமாக திட்ட செலவுகளுக்காக கடன் பெற்றுக்கொள்ள அனுமதி அளித்துள்ளது. தனி பொதுக்கணக்கு தொடங்கப்பட்ட அன்றைய தேதியில், (17-12-2007) புதுச்சேரி அரசு மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய மொத்த கடன் பாக்கி ₹ 2,177 கோடி ஆகும். இது புதுச்சேரி அரசின் மீதுள்ள மிகப் பெரிய கடன் சுமையாகும். எனவே, இந்த கடன்பாக்கி ₹ 2,177 கோடியைத் தள்ளுபடி செய்யுமாறு மத்திய அரசாங்கத்தை புதுச்சேரி அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

**6.** ஆகஸ்ட் 2016ல் என்னுடைய அரசு பதவியேற்றது முதல் இந்தக் கடனைத் தள்ளுபடி செய்வதற்கும், ஏழாவது சம்பள கமிஷனின் பரிந்துரைகளை அமல்படுத்தியதன் மூலம் ஏற்பட்டுள்ள கூடுதல் நிதிச்சுமை ₹ 1,050 கோடியை ஏற்று உதவுமாறும், புதுச்சேரி மாநிலத்தை 15வது நிதிக்குழுவின் வரம்புக்குள்

சேர்க்கவேண்டும் என்றும், மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இதுமட்டுமல்லாமல், திட்டமில்லா செலவுகளுக்கு ஆகும் கூடுதல் நிதியை ஒதுக்கித்தர வேண்டும் என்றும், டெல்லி யூனியன் பிரதேச ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கு ஆகும் ஓய்வூதிய செலவை மத்திய அரசு ஏற்பதுபோல், புதுச்சேரி மாநில அரசு ஊழியர்களின் ஓய்வூதிய செலவையும் மத்திய அரசு ஏற்கவேண்டும் என்றும் எனது அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இது சம்பந்தமாக மாண்புமிகு பாரதப் பிரதமர் தலைமையில் நிதி ஆயோக் மூலம் நடைபெற்ற மாநில முதல்வர்கள் மாநாட்டிலும் இந்த கோரிக்கைகளை நான் வலியுறுத்திக் கூறியுள்ளேன். அதற்கு, இதுவரை மத்திய அரசிடம் இருந்து எந்தவிதமான பதிலும் இல்லை. இந்த சூழ்நிலையில், அரசிடம் உள்ள நிதி ஆதாரத்தைக் கொண்டு அனைத்து நலத்திட்டங்களையும் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு எனது அரசு அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது.

**7.** புதுச்சேரி அரசின்கீழ் 12 பொதுத்துறை நிறுவனங்கள் தற்போது இயங்கி வருகின்றன. இவற்றில் புதுச்சேரி சாராய ஆலை (PDL) மற்றும் புதுச்சேரி மின் விசைக்கழகம் (PPCL) இரண்டையும் தவிர, மீதமுள்ள நிறுவனங்கள் பல்வேறு காரணங்களால் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகின்றன. இந்த நிறுவனங்கள் சுமார் 600 கோடி அளவில் இதுவரை நட்டம்

அடைந்துள்ளன. இவற்றில் முக்கியமாக AFT, SPINCO, சுதேசி பாரதி மில், ஜெயப்பிரகாஷ் நாராயண் கூட்டுறவு நூற்பாலை, காரைக்கால் ஆகியவை உள்ளடங்கும். எனது அரசு, பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாட்டினை மேம்படுத்த வழிவகைகளை ஆராய்ந்து உரிய பரிந்துரைகளை அளிப்பதற்காக ஓய்வுபெற்ற IAS அதிகாரி திரு. விஜயன் அவர்களின் ஒருநபர் குழு நியமித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். அவர் இதுவரை நான்கு பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாடுகள் பற்றிய தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளார். இந்த அறிக்கைகள் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. இது சம்பந்தமான பல்வேறு சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**8.** புதுச்சேரி அரசுக்கு நிதிப்பற்றாக்குறை இருந்தபோதிலும், மாநிலத்தின் நம்பகத்தன்மையை உறுதி செய்யும் வகையில், 2007-08ஆம் ஆண்டில் வெளிச்சந்தையில் ரிசர்வ் வங்கி மூலம் பெறப்பட்ட ₹ 337 கோடி அசல் தொகையை அரசு சென்ற ஆண்டு திரும்பச் செலுத்தியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இதேபோல், நடப்பு நிதி ஆண்டில் (2018-19) ₹ 350 கோடி வெளிச்சந்தைக் கடனைத் திருப்பி செலுத்தவேண்டும். எனது அரசு, தொகை முதிர்வு தேதியில் இந்தக் கடனை தவறாமல் திருப்பி செலுத்த அனைத்து

நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். 2018-19ஆம் நிதி ஆண்டில் NABARD, HUDCO மற்றும் வெளிச்சந்தை கடன்கள் உட்பட செலுத்தவேண்டிய மொத்த அசல் மற்றும் வட்டித்தொகை ₹ 1,380 கோடியாகும். 2018-19ஆம் ஆண்டிற்காக கணக்கிடப்பட்டுள்ள மொத்த செலவுத் தொகையில் இது 18 விழுக்காடு ஆகும். 2007-08 நிதி ஆண்டு முதல் 2017-18 நிதி ஆண்டு வரை பெறப்பட்ட கடன்களை உள்ளடக்கி தற்போது நிலுவையிலுள்ள புதுச்சேரி அரசின் மொத்த கடன் தொகை ₹ 7,730 கோடியாகும். இது மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 25 விழுக்காடு ஆகும். 2018-19ஆம் ஆண்டில் புதுச்சேரி அரசின் தனிநபர் வருமானம் ₹ 1,95,000 ஆகும். 2017-18ஆம் ஆண்டில் அகில இந்திய வளர்ச்சி 7 விழுக்காடுதான். ஆனால், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் உற்பத்தி வளர்ச்சி 11.4 விழுக்காடாக உள்ளது. இது அகில இந்திய வளர்ச்சி விகிதத்தைவிட அதிகமாகும்.

**9.** இந்த முன்னுரையுடன் 2018-19ஆம் ஆண்டிற்கான துறை வாரியாக மேற்கொள்ளப்படவுள்ள கருத்துருக்களை தாக்கல் செய்கிறேன்.

**வேளாண்மை**

**10.** விவசாயம் கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குகிறது. விவசாயிகளின் நலன் மற்றும் அவர்களது வளர்ச்சிக்கு எனது அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு வேளாண்துறையானது இனிமேல்

“வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை” என்று பெயர் மாற்றம் செய்யப்படும். எனது அரசு, பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்குவதற்கு, அனைத்து துறைகளையும் மற்றும் துறை சார்ந்த நிறுவனங்களையும் உள்ளடக்கிய செயல் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. தீவனப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு, 364 ஹெக்டேர் பரப்பில் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**11.** கிராமப்புற மகளிர் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு “வருமான உத்திரவாதத்திட்டத்தை” (Income Guarantee Scheme) செயல்படுத்த அரசு முன்வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் “தேனும் நானும்” (Bee & Me) என்ற தேனீ வளர்ப்புத்திட்டம் எல்லா கிராமங்களுக்கும் விரிவு படுத்தப்படும். இதில் ஈடுபடும் மகளிருக்கு வங்கிக் கடன் மற்றும் 40 விழுக்காடு மானியத்துடன் உபகரணங்கள் வழங்கி தக்க பயிற்சி அளித்து அவர்கள் உற்பத்தி செய்யும் தேன் மற்றும் இதர உபபொருட்களை காதி மற்றும் கிராமப்புற தொழில் வாரியம் உள்ளிட்ட நிறுவனங்கள் மூலம் கொள்முதல் செய்து விற்பனை செய்திட வழிவகை செய்யப்படும். தீவனப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு தற்போது நடைமுறையில் உள்ள தீவனப்பயிர் உற்பத்திக்கு வழங்கப்படும் அறுவடைக்குப் பிந்தைய பொருளீட்டு மானியம் ஏக்கருக்கு ₹ 5,000 லிருந்து ₹ 8,000ஆக

உயர்த்தி வழங்கப்படும். மேலும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் தீவனப் புல்வகைகளை கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**12.** பால் உற்பத்தியைப் பெருக்க தேவைப்படுகின்ற அசோலா (Azolla) சாகுபடியை ஊக்குவிப்பதற்காக விவசாய மகளிருக்கு சாகுபடிக்குப் பிந்தைய மானியமாக ₹ 750 வீதம் 1,500 மகளிருக்கு வழங்கப்படும். கூட்டுறவு வங்கிகளின் மூலம் விவசாயிகள் பெறக்கூடிய பயிர்க் கடனை தவணை தவறாமல் செலுத்தும் விவசாயிகளுக்கு, மத்திய அரசு அளித்துள்ள 3 விழுக்காடு வட்டித் தள்ளுபடி தவிர மீதமுள்ள 4 விழுக்காட்டை புதுச்சேரி அரசு மானியமாக வழங்கி விவசாயிகள் வட்டியில்லா கடன் பெற வழிவகை செய்யப்படும்.

**13.** காரைக்கால் பகுதியில் நெல் தரிசு பயிர்களான பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்கள் பயிரிடும் பரப்பையும், உற்பத்தியையும் அதிகரிக்கும் நோக்கோடு மத்திய அரசு நிதி உதவியுடன் 20 கிராமங்களுக்கு தலா ₹ 5 இலட்சம் வீதம் ₹ 1 கோடி செலவில் செயல் விளக்கங்கள், சான்று விதைகள், நுண்ணூட்டக்கலவை, உயிர் உரங்கள், உயிரக பூச்சிக்கொல்லிகள், நீர் வழித்தட சாதனங்கள், தெளிப்பு நீர்க் கருவிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**14.** பாசன நீர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டும், விவசாயத்திற்காக அதிக அளவு நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதை தவிர்த்திடவும், குறுவை மற்றும் சொர்ணாவாரி பருவத்தில் நெல் பயிருக்கு மாற்றாக, குறைந்த அளவு நீரைக்கொண்டு சாகுபடி செய்யக்கூடிய சிறு மற்றும் குறு தானியப் பயிர்களான கம்பு, கேழ்வரகு, குதிரைவாலி, தினை, சாமை, வரகு ஆகியவற்றுக்கு சாகுபடிக்கு பிந்தைய பொருளீட்டு மானியமாக ஹெக்டேர் ஒன்றுக்கு ₹ 10,000 வழங்கப்படும்.

**15.** “பரம்பரகாத் கிரிஷி விகாஸ் யோஜனா” (PKVY) என்ற இயற்கை வேளாண்மைத் திட்டத்தின்கீழ், 400 ஏக்கர் பரப்பளவில் குழுக்களாக இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தலா 50 ஏக்கர் பரப்பளவில், புதுச்சேரியில் 6 குழுக்களாகவும், காரைக்காலில் 2 குழுக்களாகவும் செயல்படுத்தப்படும். இயற்கை வேளாண்மை சாகுபடித் தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்கவும், மகசூல் இழப்பை ஈடு செய்திடவும் ஹெக்டேருக்கு ₹ 12,500 நிதி உதவி வழங்கப்படும். இயற்கை வேளாண்மைத் திட்டத்தின்கீழ் (RKVY) இயற்கை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு நாட்டுப்பசுக்கள் வழங்கப்படும். இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதற்காக, விவசாயிகள் பங்களிப்பு உறுதித்திட்டத்தின்கீழ், இயற்கைச் சாகுபடித் தரச்சான்று அளிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

**16.** தேசிய விவசாய விரிவாக்கம் மற்றும் தொழில் நுட்பத்திட்டத்தின்கீழ், விதைகளின் இனத்தூய்மை மற்றும் முளைப்புத்திறன் பரிசோதனை செய்வதற்கு, காரைக்காலில் உள்ள பண்டித ஜவஹர்லால் நேரு விவசாயக் கல்லூரியில் (PAJANCOA) ₹ 12 இலட்சம் செலவில் சோதனைக்கூட வசதிகள் ஏற்படுத்தப்படும். மேலும், புதுச்சேரியில் உள்ள மாநில விதை பரிசோதனை நிலையத்தை ₹ 17 இலட்சம் செலவில் மத்திய அரசு நிதி உதவியுடன் மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. டாக்டர் M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி அமைப்புடன் இணைந்து, மண்வள அட்டை திட்டத்தின்கீழ், அனைத்து விவசாயிகளுக்கும் தங்களின் நிலங்களின் மண்வளத்தை அறிந்து கொள்ளும் வகையில் மண்வள அட்டை வழங்கப்படும். மாண்புமிகு உச்சநீதிமன்ற ஆணையின் அடிப்படையில், காவிரி மேலாண்மை அமைப்பு தற்போது அமைக்கப்பட்டுள்ளது. காவிரிநீர் ஆதாரம் மூலம் காரைக்கால் விவசாயிகளின் குறுவை மற்றும் சம்பா சாகுபடி உரிமையை மாண்புமிகு உச்சநீதிமன்றம் நிலைநாட்டியுள்ளது. மத்திய அரசு காவிரி மேலாண்மை வாரியத்தின் வரைவுத் திட்டத்தில் மாநிலங்களுக்கிடையே ஏற்படும் காவிரி நதிநீர் பங்கீட்டு கோரிக்கைகளை இறுதியாக மத்திய அரசு முடிவு செய்யும் என்று கோரியது. ஆனால், காவிரி மேலாண்மை வாரியம் அனைத்து அதிகாரங்களும் கொண்டதாக இருக்கவேண்டும் என்று புதுச்சேரி அரசு மாண்புமிகு

உச்சநீதிமன்றத்தின் முன்பு வைத்த வாதத்தை உச்சநீதி மன்றமும் ஏற்றுக்கொண்டு புதுச்சேரி அரசைப் பாராட்டி அதன்படியே உத்திரவிட்டதை நான் இம்மன்றத்தில் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வழக்கில் புதுச்சேரி அரசுக்காக வாதாடிய வழக்கறிஞர்கள் உச்சநீதிமன்றத்தால் பாராட்டப்பட்டார்கள். உச்சநீதிமன்றத் தீர்ப்பால், காரைக்கால் பகுதி விவசாயிகளின் பாசன நீர் பற்றாக்குறை பெருமளவில் தீர்க்கப்பட வாய்ப்புள்ளது என நம்புகிறேன். புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் செயல்படும் அரசு விவசாயக் கல்லூரி (PAJANCOA), ராஜீவ்காந்தி அரசு கால்நடை மருத்துவக்கல்லூரி, வேளாண் அறிவியல் நிலையங்கள் (KVK) ஆகியவற்றை உள்ளடக்கிய விவசாயப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவ அரசு உத்தேசித்துள்ளது. குறைவான மின்சாரம் மற்றும் நிலத்தடி நீரை உபயோகப்படுத்தும் விவசாயிகளுக்கு விருதுகள் வழங்கப்படும். சிறப்பான நிலத்தடி நீர் மேலாண்மையை உறுதிசெய்யும் வகையில் புதுச்சேரி நிலத்தடி நிர்வாக அமைப்பு மேம்படுத்தப்படும். விவசாயத் தொழிலாளர்கள் நலனை கருத்தில்கொண்டு விவசாய தொழிலாளர் நலவாரியத்தின் மூலமாக நலத்திட்டங்கள் நிறைவேற்றப்படும். வேளாண்மையில் அதிக மகசூல் பெற்று சிறப்பாக சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு தக்க விருதுகள் மற்றும் பண முடிப்பு வழங்கப்படும்.

**கால்நடை பராமரிப்பு**

**17.** கறவைப் பசுக்கள் மற்றும் கலப்பினக் கன்றுகளை பராமரிக்கும் செலவினைக் குறைப்பதற்கும், பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், கறவை மாட்டுத்தீவனம் மற்றும் கன்றுத் தீவனம், அனைத்து பால் உற்பத்தியாளர்களுக்கும் 75 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்படும். பால் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டும், பெண்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கவும், மகளிர் மற்றும் மகளிர் குழு உறுப்பினர்கள் சுமார் 6,000 கறவை மாடுகள் வாங்க 25 விழுக்காடு மானியம் வழங்கப்படும். நடப்பு ஆண்டில் பால் உற்பத்தி 49,000 மெட்ரிக் டன், முட்டை உற்பத்தி 113.70 இலட்சங்கள் மற்றும் இறைச்சி உற்பத்தி 14,622 மெட்ரிக் டன் என்கிற அளவில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்குக் கோமாரி நோய் மற்றும் PPR நோய் இல்லாத மாநிலமாக புதுச்சேரியை அறிவிக்க இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும். கால்நடை சேவைகளுக்காக 24 மணி நேரமும் செயல்படும் இருசக்கர அவசர ஊர்திகள் புதுச்சேரி மாநிலத்தின் நான்கு பிராந்தியங்களிலும் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். பாலின விந்து தொழில்நுட்பம் மூலம் பசுங்கன்றுகள் ஈனும் வகையில் செயற்கை கருவூட்டல் செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். கருமாற்று தொழில்நுட்பம் புதுச்சேரியில் அறிமுகப்படுத்தப்படும். ரேபிஸ் நோய் பகுப்பாய்வு மையம் ராஜீவ் காந்தி அரசு கால்நடைக் கல்லூரியில் அமைக்கப்படும்.

**18.** கிராமப் புறங்களில் கால்நடை நல சேவையின் தேவையைக் கருத்தில் கொண்டு, இரண்டு வாகனங்கள் நடமாடும் கால்நடை மருந்தகங்களுக்கு வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கால்நடை வளர்ப்போர்களுக்கு அவர்களுடைய இடத்திலேயே கால்நடைகளுக்குத் தேவையான சிகிச்சையை அளிக்கமுடியும். கரியமாணிக்கம் மற்றும் கோட்டுச்சேரி பகுதிகளில் உள்ள அரசு கோழிப்பண்ணைகள் புனரமைக்கப்படும். கால்நடைகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிப்பதற்கு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளுக்கு எடுத்துச்செல்லும் வசதியுடைய 2 புதிய மொபைல் (Mobile) எக்ஸ்ரே கருவிகள் தலா ஒன்று வீதம் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து கால்நடை மருந்தகங்களுக்கும் எளிதில் எடுத்துச்செல்லும் வசதியுடைய 17 அல்ட்ராசவுண்டு ஸ்கேன் கருவிகள் வாங்கப்பட உள்ளன. வெள்ளாடு / செம்மறி ஆடு மற்றும் கோழிப்பண்ணை வைக்க ஆர்வமுள்ளவர்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக்கல்லூரியில் உள்ள திறமையான அலுவலர்களைக் கொண்டு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். மேலும், "தொழில் முனைதலை உருவாக்குதல் மற்றும் வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல்" (EDEG) என்ற மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் / நபார்டு வங்கி மூலம் கடனுதவி பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக்கல்லூரியில், நடப்பாண்டில் கூடுதல் வகுப்புகள் தொடங்க ஏற்பாடு செய்யப்படும்.

**கலை மற்றும் பண்பாடு**

**19.** புதுச்சேரி மற்றும் ஏனாம் பகுதிகளில் தாகூர் கலை மற்றும் பண்பாட்டு வளாகம் அமைத்திடவும், தென்மண்டல பண்பாட்டு மையத்திற்கான துணை மையம் ஒன்றினை புதுச்சேரியில் நிறுவவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அரியாங்குப்பம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பாரதியார் பல்கலைக்கூட வளாகத்தில் கலையரங்கம் ஒன்று மத்திய அரசு உதவியோடு ₹ 9 கோடி செலவில் கட்டப்படவுள்ளது. வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள 700 கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு நிதி உதவி செய்யப்படும். இந்த வருடம் 21 கலைஞர்களுக்கு “கலைமாமணி விருதும்”, இலக்கியத்தில் சிறந்த 16 கலைஞர்களுக்கு “தொல்காப்பியர் விருதும்”, 10 கலைஞர்களுக்கு “கம்பன் புகழ் இலக்கிய விருதும்”, 8 கலைஞர்களுக்கு “நேரு சிறுவர் இலக்கிய விருதும்” வழங்கப்படும்.

**குடிமைப் பொருள் வழங்கல்**

**20.** புதுச்சேரி அரசு, முழுமையான பொது விநியோகத் திட்டத்தின்கீழ், அனைவருக்கும் உணவுக்கு உத்திரவாதம் அளித்திடும் நோக்கோடு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013ன்படி இவ்வாட்சிப்பரப்பின் நான்கு பிராந்தியங்களிலும், நேரடிப் பணப் பயன் வழங்கும் (DBT) திட்டத்தைக் கடந்த 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நடைமுறைப்

படுத்தியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். “அந்த்யோதயா அன்ன யோஜனா” (AAY) திட்டத்தின்கீழ், மிகவும் வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு, உணவுப் பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு 35 கிலோ அரிசிக்கு ஈடாக ₹ 933.10 வீதம், சுமார் 27,000 உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. இதேபோன்று, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள (BPL) 1,51,000 அட்டைதாரர்களின் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தலா 5 கிலோ அரிசிக்கு ஈடாக ₹ 133.30 வீதமும் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் பண மானியம் நேரடியாக கொடுக்கப்படுகிறது. ஏழை மக்களின் சிரமத்தைக் கருத்தில் கொண்டு எனது அரசு மானியத் தொகையைப் பணமாக இல்லாமல் பயனாளிகளுக்கு அரிசியாகவே வழங்க மத்திய அரசிடம் கோரியது. இதற்கு மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. குடிமைப் பொருள் வழங்கல் துறை மூலமாக நேரடியாக விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்து இலவச அரிசி திட்டத்தை செயல்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**21.** பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைக்கும் முகமாக, உயிரளவியலை (Biometric) அடிப்படையாகக் கொண்ட சிறுவடிவ கையடக்க உணவுப்பங்கீட்டு அட்டை (Smart Ration Card)

2011ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த அட்டைகளில் பதிக்கப்பட்ட வில்லைகள் (Chip) வழக்கொழிந்து விட்டபடியாலும், இவற்றில் ஒரு குடும்பத்தில் இருவருக்கு மேற்பட்டவர்களின் விவரங்களை, உள்ளடக்க இயலாததாலும், அட்டை அடிப்படையிலான பொது விநியோகத் தீர்வுக்குப் பதிலாக, ஆதார் அடிப்படையிலான பொது விநியோகத் தீர்வுக்கு மாறிட எனது அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம், குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும், நியாய விலைக் கடைகளில், உயிரளவியல் முறையில் (Biometric) தங்களது அடையாளத்தை உறுதி செய்து, பொருட்களைப் பெற இயலும். வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் (BPL) மற்றும் மிகவும் வறுமை நிலையில் (AAY) உள்ள அட்டைதாரர்களுக்கு இலவசமாக தற்போது ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வரும் 20 கிலோ அரிசியும், வறுமைக் கோட்டுக்குமேல் உள்ளவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுவரும் 10 கிலோ அரிசியும் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வழங்கப்படும். இதற்காக ₹ 140 கோடி இந்நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், தேவைப்படும் கூடுதல் நிதி 2018-19ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும்.

**கூட்டுறவு**

**22.** எளிய பிரிவினர் நலனை பாதுகாத்திடவும், வியாபாரம் மற்றும் வர்த்தகத்தில் இடைத்தரகர்களை நீக்குவதற்கும், உற்பத்தியாளர்களாகவும், நுகர்வோர்களாகவும் உள்ள பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதையும் முக்கியமான இலக்காக கொண்டதே கூட்டுறவு இயக்கமாகும். தொடக்கக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் கடன் தொகையை முறையாகச் திருப்பிச் செலுத்தும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வட்டி மானியம் 5 விழுக்காட்டிலிருந்து 6 விழுக்காடாகவும், கடனை முறையாகத் திருப்பிச் செலுத்தும் இதர உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வட்டி தள்ளுபடி 4 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகவும் உயர்த்தப்படும். பெருகி வரும் நெல் சேமிப்பு வசதிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, புதுச்சேரி மையக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் இரும்பிலான சேமிப்புக் கலங்கள் அமைக்கப்படும். எனது அரசு, கைத்தறித் துறையை மேம்படுத்தும் நோக்கில், ₹ 1 கோடி என்ற நிதி இலக்குடன், புதுச்சேரி மற்றும் மாஹி பகுதிகளில் 12 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 200 கால்மிதி (Pedal Looms) தறிகளை நிறுவ உத்தேசித்துள்ளது. தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், விற்பனைக்கு ஆயத்தமான கைத்தறி தயாரிப்புகளுக்கு நெசவுக் கூலியில் 50 விழுக்காடு மற்றும் நூல் கொள்முதல் விலையில் 50 விழுக்காடு வரையிலும் மானியம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனைத்து

கூட்டுறவு சங்கங்களிலும் புதிய நிர்வாகக் குழு அமைக்கப்படும். டிராக்டர் வாடகை மானியம் உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்திடும் வண்ணம் ₹ 50 இலட்சம் கொண்ட தொகுப்புத் தொகை (Corpus Fund) ஏற்படுத்தப்படும். பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையில் பாண்லேயின் பங்கை அதிகரிக்க, கூடுதலான எண்ணிக்கையில் விற்பனை முகவர்கள் நியமிக்கப்படுவார்கள். கூடுதலாகக் கொள்முதல் செய்யப்படும் பால் அளவைக் கையாளுவதற்குண்டான விரிவாக்க வசதிகள் பாண்லே நிறுவனத்திற்கு செய்து தரப்படும். அதன் ஒரு பகுதியாக அரியூர் பகுதியில் பாண்லேயின் துணை பால் குளிரூட்டும் மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேசிய பால் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 4,000 உறுப்பினர்கள் பயன் அடையும் விதத்தில், தொடக்க கூட்டுறவு பால் சங்கங்களுக்கு 500 துருப்பிடிக்காத இரும்பிலான (Stainless Steel) பால் கலன்களும் (கேன்), 10 தானியங்கி பால் சேகரிப்பு உபகரணங்களும் மற்றும் இதர பால் உற்பத்தி உபகரணங்களும் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பள்ளிக்கல்வி**

**23.** கல்வி, மனிதவள மேம்பாட்டில் முக்கிய பங்காற்றுவதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவுகிறது. ஒவ்வொருவருக்கும் உரிய தரமான கல்வி கிடைக்க ஏதுவாக எனது அரசு

கல்வித்துறையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டு சுமார் 550 ஆசிரியர்கள் புதியதாக தேர்வு செய்யப்படுவார்கள். 6, 9 மற்றும் 11 ஆகிய வகுப்புகளில் CBSEக்கு இணையான பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. வரும் ஆண்டில் மற்ற வகுப்புகளுக்கும் இது அறிமுகப்படுத்தப்படும். மாணவர்கள் நம்பிக்கையோடு "நீட்" (NEET) தேர்வை எதிர் கொள்ளும் வகையில் சுமார் 750 மாணவர்கள் பயன் அடையும்படி நீட் பயிற்சி வகுப்புகளை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாணவ மாணவிகளின் படைப்பாற்றலை மேம்படுத்தவும், கணக்கீட்டு சிந்தனை, இணக்கக் கற்றல் மற்றும் இயற் கணக்கீடு போன்ற திறன்களை பதியவைக்கவும், தலா ₹ 20 இலட்சம் செலவில் அரசு பெண்கள் மேனிலைப்பள்ளி, காலாப்பட்டு; அரசு பெண்கள் மேனிலைப்பள்ளி, கதிர்காமம்; தந்தை பெரியார் அரசு மேனிலைப்பள்ளி, அரியாங்குப்பம் ஆகிய மூன்று பள்ளிகளில் "அட்டல் புதுமைத் திட்டத்தின்"கீழ் (Atal innovation Mission) அட்டல் சீராக்க ஆய்வுக் கூடங்களை (Atal Tinkering Laboratories) ₹ 60 இலட்சம் செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**24.** தற்போதைய மத்திய கல்வி வாரியப் (CBSE) பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தை பகுத்தாயவும், அறிவியல் மற்றும் கணித உபகரணங்களைக் கொண்டு எளிய வகுப்பறைச்

சோதனைகள் மூலம் இடைவெளியைக் கண்டறியவும், பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தை புரிந்துகொள்ளுதலை மேம்படுத்த ஏதுவாக, தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பல்வேறு பயிற்சித் திட்டங்களும், புத்தாக்க வகுப்புகளும் நடத்தப்படும். அரசுப்பள்ளிகளில் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்கில், பள்ளிகளில் தொழில்நுட்பம் சார்ந்த கற்றல் ஆதாரங்களை ஏற்படுத்தவும், ஆசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கவும் அனைத்து நடுநிலை, உயர்நிலை மற்றும் மேனிலைப்பள்ளிகளிலும் டிஜிட்டல் வகுப்பறைகள் அமைக்கப்படும். தற்போது தனியார் பங்களிப்புடன் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் 75 வகுப்பறைகள் ஸ்மார்ட் வகுப்பறைகளாக மாற்றப்பட்டுள்ளன. அதேபோல, மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளிலும் அரசுப் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் தனியார் பங்களிப்போடு மாற்றப்படும்.

**25.** கல்வித் தரத்தை மேம்படுத்திட, உயிரோட்டமுள்ள முப்பரிமாண (Animated 3D) படங்கள் மூலம் குழந்தைகள் கற்றிட ஏதுவாக, 30 நடுநிலைப் பள்ளிகளில் தகவல் தொடர்பு தொழில்நுட்ப ஆய்வகங்கள் (ICT) அமைக்கவும், பள்ளிகளில் நூலகங்களையும், வாசிக்கும் மையம் (Reading Corner) பலப்படுத்துதல், மாணவர்கள் செயல்முறை கற்றல் மூலம் அறிவியல் கருத்துகளை கற்றிட ஏதுவாக அனைத்து தொடக்க

பள்ளிகளிலும் அறிவியல் மையம் (Science Corner) ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது. பெண்களுக்கு அதிகாரமளித்தல் திட்டமும், மாணவிகளுக்கு தற்காப்புத் திட்டமும் நடைமுறைப் படுத்தப்படும். தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், குறைந்தபட்ச கணினி அறிவு பெறும் வகையில் கணினி அறிவு பயிற்சித் திட்டம் (Digital Literacy Training Programme) ஏற்பாடு செய்யப்படும்.

**26.** ₹ 20 கோடி செலவில் பள்ளிக் கட்டடங்கள் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஒளிவண்ண விளக்குகளுடன் கூடிய 10 கைப்பந்து மைதானங்கள் அமைக்கப்படும். பெருநிறுவனங்களின் சமூகப்பங்களிப்புத் திட்டத்தின்கீழ் ஏனாம் பகுதியில் 8 பள்ளிகள் Smart பள்ளிகளாக மாற்றப்படும். எனது அரசு, 'அட்சயப் பாத்திரம்' என்னும் தன்னார்வல தொண்டு நிறுவனத்துடன் இணைந்து முதற்கட்டமாக புதுச்சேரி பகுதியில் சத்துமிக்க முழுமையான மதிய உணவை வழங்கத் திட்டமிட்டுள்ளது. அதன்மூலம் சுமார் 50,000 மாணவர்கள் பயனடைவார்கள். காரைக்காலில், டீசலில் இயங்கும் 2 மைய சமையற்கூடங்களை எரிவாயுவில் இயங்கும் சமையற்கூடங்களாக மாற்றவும், ஏனாமில் புதியதாக ஒரு மைய சமையற்கூடம் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி**

**27.** கிராமப் பகுதிகளில் உயர் கல்வியை ஊக்குவிக்க ஏம்பலம் தொகுதியில் உள்ள கோர்க்காட்டில் தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இணைப்புக் கல்லூரியாக புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிறுவப்படும். வில்லியனூரில் உள்ள கஸ்தூரிபாய் மகளிர் கல்லூரிக்கு கூடுதல் கட்டடம் கட்டப்படும். புதுச்சேரி பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும். அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (AICTE) உதவியோடு காரைக்கால் பாலிடெக்னிக் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்களுக்குத் தங்கும் விடுதி கட்டித்தரப்படும். புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தனியார் /கல்வியாளர் /அறக்கட்டளை மூலம் பல்கலைக்கழகங்கள் அமைத்தல், அதன் செயல்பாடுகள் மற்றும் அவற்றை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றிற்கான முழுமையான வழிகாட்டுதல்களை கொண்டிருக்கும் வகையில் "புதுச்சேரி தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டம்" கொண்டு வரப்படும். புதுச்சேரி டாக்டர் அம்பேத்கர் சட்டக்கல்லூரியை தேசியக் கல்லூரியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். புதுச்சேரி தொழில்நுட்பக் கல்லூரி அகில இந்திய அளவில் 100வது இடத்தைப் பிடித்துள்ளது என்பதை பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். AICTE ஆனது கூடுதலாக 240 மாணவர்கள் சேர்க்கைக்கு ஒப்புதல் அளித்துள்ளது. புதுச்சேரி

தொழில்நுட்பக் கல்லூரிக்கு அதன்படி நான்கு பாடப்பிரிவுகள் சுயநிதி சேர்ப்பு அடிப்படையில் தொடங்கப்படும். காரைக்கால், பெருந்தலைவர் காமராஜர் தொழில்நுட்பக் கல்லூரியில் இந்த ஆண்டு புதிய கட்டடங்கள் கட்டப்படும். அகில இந்திய அளவில் தாகூர் கலைக்கல்லூரி, இந்திரா காந்தி கலைக்கல்லூரி, கதிர்காமம் ஆகியவை 100 முதல் 150 இடங்களுக்குள் உயர்க்கல்வி தகுதி அடிப்படையில் இடம்பெற்றுள்ளன. புதுச்சேரி மாநிலம் அகில இந்திய அளவில் உயர்கல்வியில் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளது.

**மின்சாரம்**

**28.** மின்சார சட்டம் 2003 மற்றும் மத்திய மின் ஆணையத்தின் மின்பாதுகாப்பு விதிகளின்கீழ் வகுக்கப்பட்டுள்ள பணிகளைச் செய்வதற்கு ஒரு தனி மின் ஆய்வகம் அமைக்கப்படவுள்ளது. புதுச்சேரியில் மின்சார பணிகளுக்கான ஒப்பந்தக்காரர் உரிமம் மற்றும் ஒயர்மேன் உரிமம் ஆகியவை வழங்குவதற்கு இந்த அமைப்பு அதிகாரம் படைத்ததாகும். தரக்கட்டுப்பாடு சம்பந்தமான மத்திய அரசின் ஆணைகளை அமல்படுத்துதல் மற்றும் மின் அளவிகள் சோதனைக்கூடம் (Meter Testing and Standard Laboratory) அமைத்தல் ஆகியவை இந்த மின் ஆய்வகத்தின் கீழ்வரும் பணிகளாகும். திருபுவனை மற்றும் பாகூர் துணைமின் நிலையங்களில் தற்போதுள்ள இரண்டு

16 MVA திறன் கொண்ட மின்மாற்றிகள் மாற்றப்பட்டு புதிய 25 MVA திறன்கொண்ட மின்மாற்றிகள் நிறுவப்படும். மேலும், 25 MVA திறன்கொண்ட மின்மாற்றிகள் வில்லியனூர் மற்றும் காலாப்பட்டு துணைமின் நிலையங்களில் தலா ஒன்று நிறுவப்படும். இதேபோல், 31.5 MVA திறனுள்ள மின்மாற்றி ஒன்று மரப்பாலம் துணைமின் நிலையத்தில் நிறுவப்படும். தொண்டமாநத்தத்தில் புதியதாக நிறுவப்படவுள்ள 110/22 கிலோவோல்ட் துணைமின் நிலையத்திலிருந்து மின் விநியோகத்திற்காக ₹ 5 கோடி செலவில் 22 கிலோவோல்ட் மின்னூட்டிகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது பழுதடைந்துள்ள 1,50,000 மின் அளவிகளுக்கு (Meters) பதிலாக புதியதாக Static / Smart மின் அளவிகள் நடப்பாண்டில் நிறுவப்படவுள்ளன. புதியதாக 100 மின்மாற்றிகள் அமைப்பதற்கும் மற்றும் அதனைச்சார்ந்த மின் விநியோக கட்டமைப்பை மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், 1,100 மின் அளவிகள் (Meters) மின் மாற்றிகளில் பொருத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

**புதுப்பிக்கவல்ல மின்சக்தி**

**29.** தடையற்ற மின்சாரம் வழங்குதலை உறுதி செய்யும் பொருட்டு எனது அரசு சூரியஒளி மின்சக்தி பயன்பாட்டை ஊக்குவித்து வருகிறது. இந்த வருடம் 1,500 KWp திறனுள்ள

சூரியஒளி மின்சக்தி சாதனங்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் ஓர் அங்கமாக, பல்வேறு அரசுக் கட்டடங்களில் 2 MWp சூரியஒளி மின்சக்தி சாதனங்கள் பொருத்தப்படும். ஜிப்மர் மருத்துவமனை வளாகத்தில் 1,500 KWp திறனுள்ள சூரியஒளி மின்சக்தி சாதனங்கள் நிறுவ ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 500 KWp சாதனங்கள் அரசுக் கட்டடங்களில் நிறுவப்படும். மத்திய அரசு உதவியுடன், 100 அரசுப் பள்ளிகளில் பழைய விளக்குகளை மாற்றி புதிய LED விளக்குகள் பொருத்தவும் சாதாரண மின் விசிறிகளை மாற்றி மின்சாரம் சேமிக்கும் மின்விசிறிகள் பொருத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தீயணைப்பு**

**30.** ₹ 2 கோடி செலவில் HUDCO நிதி உதவியுடன் பாகூர், மடுகரை மற்றும் திருக்கனூரில் புதிய தீயணைப்பு நிலையம் / ஊழியர் குடியிருப்புகள் இந்த ஆண்டுக்குள் கட்டிமுடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு புதியதாக டி.ஆர். பட்டினத்தில் தீயணைப்பு நிலையம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தீயணைப்புத் துறைக்கு ₹ 1 கோடி செலவில் புதிய வாகனங்கள் வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மீனவர் நலம்**

**31.** மீனவ சமுதாய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த எனது அரசு உறுதி பூண்டுள்ளது. மீனவர்களுக்கு தற்போது வழங்கப்படும் மீன்பிடித்தடைக்கால நிவாரணம், முதியோர் ஓய்வூதியம், மழைக்கால நிவாரணம், மாநில காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இறந்த மீனவ வாரிசுதாரர்களுக்கு உடனடி நிவாரணம் ஆகியவை தொடர்ந்து வழங்கப்படும். நடப்பாண்டில், இத்திட்டங்களுக்காக ₹ 31 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இரும்பு / மரவிசை / கண்ணாடி நுண்ணிழை பிளாஸ்டிக் படகுகள் வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியமாக தலா ₹ 20 இலட்சம் வீதம் 16 மீனவ பயனாளிகளுக்கு மொத்தம் ₹ 3.20 கோடி வழங்கப்படும். மேலும், கண்ணாடி நுண்ணிழை பிளாஸ்டிக் வல்லம் வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியமாக 5 மீனவ பயனாளிகளுக்கு தலா ₹ 2 இலட்சம் வீதம் மொத்தம் ₹ 10 இலட்சம் வழங்கப்படும். இரும்பு / மரவிசை படகுகளுக்கு ₹ 20,000 வீதமும், கண்ணாடி நுண்ணிழை பிளாஸ்டிக் படகுகளுக்கு ₹ 10,000 வீதமும் பராமரிப்பு பணிக்காக 624 படகுகளுக்கு நிதி உதவி வழங்கப்படும். மைய அரசு ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ், சேமிப்பு மற்றும் நிவாரண நிதியாக 24,500 மீனவ பயனாளிகளுக்கு தலா ₹ 3,000 வீதம், ₹ 7.35 கோடி வழங்கப்படும், 30 இயந்திரப் படகுகளில் உள்ளமைந்த கலப்பு பணித்தளம் பொருத்த தலா ₹ 2 இலட்சம் வழங்கப்படும்.

**32.** மீனவ சமுதாய மக்களின் நலத்திற்காக, எனது அரசு, கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் வழங்கப்படும் நிதி உதவித் தொகையை கூடுதலாக வழங்க உத்தேசித்துள்ளது.

- ⁕ 10 மீனவ பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியத்துடன் ஐஸ்பெட்டி பொருத்திய இருசக்கர வாகனம் வழங்க ₹ 22,500லிருந்து ₹ 30,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

- ⁕ 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 75 விழுக்காடும், அதற்குமேலும் மதிப்பெண்கள் பெற்ற 675 மீனவ மாணவர்களுக்கு முறையே ₹ 5,000லிருந்து ₹ 10,000ஆகவும் மற்றும் ₹ 7,000லிருந்து ₹ 15,000ஆகவும் உயர்த்தி ரொக்கப்பரிசாக வழங்கப்படும்.

- ⁕ உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பொதுமக்களுக்கான இடுபொருள் மானியமாக ஏக்கர் ஒன்றுக்கு ₹ 5,000லிருந்து ₹ 7,500ஆகவும், மீனவர் / மீனவ பெண்கள் / கூட்டுறவு சங்கங்களுக்கு இடுபொருள் மானியமாக ஏக்கர் ஒன்றுக்கு ₹ 5,000லிருந்து ₹ 10,000ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

* பொதுமக்கள் / மீனவர் / மீனவப் பெண்கள் / கூட்டுறவு சங்கங்களுக்கு இறால் வளர்ப்போர்க்கான உவர்நீர் மானியம், ஏக்கர் ஒன்றுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் ₹ 10,000லிருந்து ₹ 15,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**சுகாதாரம்**

**33.** புதுச்சேரி அரசு, தற்போதிருந்துவரும் மருத்துவ மனைகளின் மூலம் தரமான சுகாதாரச் சேவையை அளித்து வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மேலும், புதுச்சேரி மாநிலத்தின் சுகாதாரக் குறியீடுகள் (Health Indicators) சிறப்பாக உள்ளன. குழந்தை இறப்பு வீதத்தைக் குறைப்பதில் யூனியன் பிரதேசங்களுக்கிடையே இவ்வாட்சிப்பரப்பு முதல் இடத்திலும், அனைத்திந்திய அளவில் இரண்டாவது இடத்திலும் உள்ளது என்பதை இந்தச் சபையில் பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் அடைகிறேன். எச்.ஐ.வி. நோய் பாதிப்பு மிகக்குறைவாக உள்ள மாநிலங்களில் இவ்வாட்சிப்பரப்பு முதல் இடத்தில் உள்ளது (0.2 விழுக்காடு). JIPMER மருத்துவமனையின் பல்நோக்கு சிகிச்சை மையம் ஒன்று ஏனாம் பகுதியில் அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இது விரைவில் அமைக்கப்படும். காரைக்காலில் சுமார் ₹ 400 கோடியில் JIPMER

மருத்துவமனை கட்டும் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள், HUDCO நிதி உதவியுடன் மேம்படுத்தப்படும். அரசு மருத்துவக் கிடங்கில் எல்லா வகையான மருந்துகளையும் ஒரே இடத்தில் இருப்பு வைப்பதற்கு புதியதொரு நவீன சேமிப்புக் கிடங்கு கட்டப்படும்.

**34.** பெருகிவரும் அவசரகால விபத்து நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு முக்கியமாக முதுகு தண்டுவடம் சம்பந்தப்பட்ட நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக இந்திராகாந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்ட மேற்படிப்பு நிறுவனத்தில் தண்டுவட சிகிச்சைப்பிரிவு ஒன்று தனியாக அமைக்கப்படும். குடும்ப நலத்திட்டத்தின் ஓர் அங்கமாக, ராஜீவ்காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில், குழந்தையின்மை சிகிச்சைப் பிரிவில் கர்ப்பப்பை கருவூட்டல் சிகிச்சை வசதிகள் செய்து தரப்படும். வெளி நோயாளிகளின் வசதிக்காக காரைக்காலில் புதிய “வெளிநோயாளிகள் பிரிவு” கட்டடம் ஒன்று இந்த வருடம் அமைக்கப்படும். சேதராப்பட்டு, பாகூர் மற்றும் வில்லியனூர் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட கட்டுமானப் பணிகள் இந்த ஆண்டில் துவங்கப்படும். அரியாங்குப்பம் அரசு மருத்துவமனை விரிவாக்கம் செய்ய புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

**35.** சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள ஏழைமக்களுக்கு மருத்துவச் சேவை அளிக்கும் மத்திய அரசின் திட்டமான "ஆயுஷ்மான் பாரத்" புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இந்த வருடம் அமல்படுத்தப்படும். புதுச்சேரியிலுள்ள மக்களுக்கு நன்மை பயக்கும் விதமாக அனைத்து ஏழை எளிய மக்களையும் உள்ளடக்கிய ஒரு சுகாதார பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுவதில் புதுச்சேரி அரசு தீவிர அக்கறை கொண்டுள்ளது. முதற்கட்டமாக, புதுச்சேரி அரசு சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவு மக்களுக்கு 'பணமில்லா சிகிச்சை' வழங்குவதற்காக இந்திய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த திட்ட நோக்கத்திற்காக, காப்பீட்டுப் பயன்முறையில் இந்திய அரசு உதவியுடன் ஒரு கூட்டு நடவடிக்கையாக செயல்படுத்த, இவ்வாட்சிப்பரப்பில் சுமார் 1,03,435 குடும்பங்கள் இந்திய அரசாங்கத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளன. இத்திட்டத்தை விரிவுபடுத்தி புதுச்சேரி மாநிலத்தின் அனைத்து ஏழை மக்களும் பயன்பெறும் வகையில் ஆண்டுக்கு ₹ 1.5 இலட்சம் வரை வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ₹ 5 இலட்சம் வரை மருத்துவச் சேவை பெறும் வகையில் "முதலமைச்சர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்" நடைமுறைப் படுத்தப்படும். "நிக்ஷ்ய போஷன் யோஜனா" திட்டத்தின்கீழ், 1-4-2018 அன்று அல்லது அதற்குப் பிறகு

கண்டறியப்பட்டுள்ள காசநோயாளிகளுக்கும் மற்றும் தற்போது காசநோய்க்கானச் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளுக்கும் ஊட்டச்சத்து ஊக்கத் தொகையாக மாதம் ₹ 500 வழங்கப்படும்.

**தகவல் தொழில்நுட்பம்**

**36.** எனது அரசு, நம்பகமான மற்றும் விரைவாக அரசின் சேவைகளை பொதுமக்களுக்கு அளிப்பதற்கு அரசுப் பணிகளில் தகவல் தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்த உறுதிபூண்டுள்ளது. மாணவர்கள் சமர்ப்பிக்கும் சிறந்த திட்ட அறிக்கை (Best project report) தகவல் தொழில்நுட்பத் திட்டத்தை சிறந்த முறையில் பயன்படுத்தும் அரசுத் துறை, மற்றும் சிறந்த இணையதளத்தைக் கொண்டுள்ள அரசுக் கல்லூரி ஆகியவை தெரிவு செய்யப்பட்டு, சுதந்திர தினம் / குடியரசு தினத்தில் “முதலமைச்சர் விருது” வழங்கி கௌரவிக்கப்படும். இந்திய அரசின் இணையதள வழிக்காட்டுதலின்படி, அனைத்து அரசுத்துறை இணையதளங்களும் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும். 2 கிராமங்கள் ‘டிஜிட்டல்’ கிராமங்களாக (Digital Village) தேர்ந்தெடுக்கப்பட்டு மேம்படுத்தப்படும். அரசு ஊழியர்களின் பணி சம்பந்தமான அனைத்து தகவல்களையும் கணினி மூலம் பதிவு செய்யும் மத்திய அரசின் “மனவ் ஸம்பதா” என்ற ஆன்லைன்

சேவைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இது சம்பந்தமான ஆரம்பப் பணிகள் தற்போது நடந்துவருகின்றன. தலைமைச் செயலகம் மற்றும் புதுச்சேரி இரயில் நிலையத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 19 இடங்களில் "தொழில் நிறுவனங்களின் சமூகப் பங்களிப்பு" (Corporate Social Responsibility) திட்டத்தின்கீழ் கம்பியில்லா இணையதளவசதி Wi-fi செய்து தரப்படும். மின்சாரம், குடிநீர் வரி, வீட்டுவரி ஆகியவற்றை பொதுச்சேவை மையங்களில் 'ஆன்லைன்' சேவை மூலம் பணம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மின் ஆளுமை-மாவட்ட (e-district project) திட்டத்தின்கீழ் அனைத்து அரசுத் துறைகளுக்கும் கணினி உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படும். "பிரதம மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்ஷ்ரதா அபியான்" திட்டத் தகவல் தொழில்நுட்பத் துறையின் மூலம் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு புதுச்சேரி மாநிலத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடத்தி சுமார் 3,500 நபர்களுக்குமேல் வேலை வழங்கப்பட்டுள்ளது. தொழிற்கல்வியில் கணினி படிப்பில் தேர்வு பெற்ற கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு தனியார் நிறுவனத்தோடு ஒப்பந்தம் செய்து ஒவ்வொரு காலாண்டிலும் 200 மாணவர்களுக்குக் குறைவில்லாமல் வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**தொழிலாளர்**

**37.** தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, எனது அரசு உழைக்கும் வர்க்கத்தின் தேவைக்கேற்ப தொழிலாளர் உத்தியை உருவாக்கி வருகிறது. வேலையில்லா இளைஞர்களுக்கு அதிகப்படியான வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில், வேலைவாய்ப்பகங்களை தேசிய பணியமர்வு சேவை இணைய தளத்துடன் இணைத்து வேலைவாய்ப்பு முகாம் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2 தொழிலாளர் நலமையங்கள் மூலம், 2 திறன் மேம்படுத்தும் பயிற்சி திட்டத்தை 42 அட்டவணை இனத்து மகளிருக்கு 5 நாட்களுக்கு அழகாடை தயாரித்தல் பிரிவில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் ஆன்லைன் மூலம் வேலைவாய்ப்பு பதிவு செய்தலை அவர்களுடைய பள்ளிகளில் இருந்தே செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், வேலைவாய்ப்பகத்தில் நெருக்கடியும் மற்றும் மாணவர்களின் சிரமத்தையும் தவிர்க்க முடியும். ₹ 15 கோடி செலவில், மூன்று ஆண்டுகளில் 10,000 வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு திறன்களை மேம்படுத்த பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் தொகுதியாக 260 நபர்களுக்கு பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. அமைப்புசாரா தொழிலாளர்களுக்காக ஒரு தனி வாரியம் அமைக்க நடவடிக்கை

எடுக்கப்படும். தொழிலாளர் சட்டங்கள் / விதிகளின்கீழ் செய்யவேண்டிய பதிவுகள் /புதுப்பித்தல்கள் ஆகியவை ஆன்லைன் வசதி மூலம் வழங்கப்படும். ஆட்டோரிக்ஷா தொழிலாளர்களின் நலன் கருதி ஆட்டோரிக்ஷா தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்படும்.

**38.** புதுச்சேரி மாநிலத்தில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை அதிகரிக்க, தொழிற்சாலைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கேற்புடன் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும். இதற்காக ₹ 6 இலட்சம் எதிர்வரும் 2018-19ஆம் நிதியாண்டில் செலவிடப்படும். இதன்மூலம் 1,500 இளைஞர்கள் பயன்பெறுவார்கள். வேலை தேடும் இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டும் பொருட்டு, புதுச்சேரி வேலைவாய்ப்பகத்தில் முன்மாதிரி வழிகாட்டுதல் மையம் கடந்த 2016ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதேபோன்று மற்றொரு வழிகாட்டுதல் மையம் காரைக்கால் மாவட்டத்தில் ₹ 50 இலட்சம் செலவில் அமைக்கப்படும். புதுச்சேரி கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தில், தற்பொழுது 37,705 நபர்கள் பதிவு செய்துள்ளனர். இவர்களுக்கு 50 விழுக்காடு மானிய விலையில் உணவு வழங்க நடமாடும் உணவகம் அமைக்கப்படும். முன்மாதிரியாக, இந்த வசதி புதுச்சேரி மாவட்டத்தில் சுயஉதவிக்குழுக்கள் மூலம் செயலாக்கப்படும்.

இந்தத் திட்டத்திற்காக நலவாரியத்தின் சார்பில் மாதம் ₹ 1,00,000 செலவிடப்படும். சுமார் 1,000 நபர்கள் இதனால் பயனடைவார்கள். கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பணியிடத்திற்கே சென்று மருத்துவ உதவி வழங்க மருத்துவர் மற்றும் மருத்துவ குழுக்கள் கொண்ட நடமாடும் மருத்துவ உதவி வழங்கப்படும். இதற்காக ஆண்டு ஒன்றிற்கு ₹ 50 இலட்சம் செலவு செய்யப்படும். இத்திட்டத்தினால் 27,000 நபர்கள் பயனடைவார்கள்.

**39.** கட்டுமானத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு முன்னணி பயிற்சி நிறுவனங்கள் மூலம் இந்திய குடிமைப்பணியில் (IAS) சேர முன்தேர்வு மற்றும் பிரதான தேர்வுக்கான பயிற்சி வழங்கப்படும். நுழைவுத்தேர்வு மதிப்பெண் அடிப்படையில் 50 நபர்கள் முன்னணி பயிற்சி நிறுவனங்களில் அனுமதிக்கப்படுவர். ஆண்டு ஒன்றிற்கு ₹ 20 இலட்சம் இத்திட்டத்திற்கு செலவிடப்படும். கடந்த நிதியாண்டில் 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு (புதுச்சேரியில் 2 மற்றும் ஏனாமில் 1) ISO29990;2010 தரச்சான்று பெறப்பட்டது. இந்த ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் (ஆண்கள்) மேட்டுப்பாளையம், அரசு தொழிற்பயிற்சி நிலையம் (ஆண்கள்) காரைக்கால், அரசு தொழிற்பயிற்சி நிலையம் (பெண்கள்)

காரைக்கால், ராஜீவ் காந்தி அரசு தொழிற்பயிற்சி நிலையம், மாஹே ஆகிய 4 தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ISO தரச்சான்றிதழ் பெற்று இந்நிலையங்கள் மிகுதிறன் மையங்களாக மாற்றம் செய்யப்படும். புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் காலியாக உள்ள தொழில் முறை பயிற்றுனர் (Vocational Instructor) பணியிடங்கள் நிரப்பப்படும். அரசு தொழிற்பயிற்சி நிலையம், நெட்டப்பாக்கத்தில் புதியதாக டர்னர், மெஷினிஸ்ட் ஆகிய பயிற்சிப்பிரிவுகள் துவக்கப்படும். அரசு தொழிற்பயிற்சி நிலையம், நெட்டப்பாக்கத்தில் அமைத்தது போல சூரிய மின்னாற்றல் சாதனங்கள் புதுச்சேரி மாவட்டத்தில் உள்ள மேலும் 4 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பொருத்தப்படும். அதன்மூலம் மின்கட்டணமில்லா தொழிற்பயிற்சி நிலையமாக இவை மாற்றப்படும்.

**40.** கட்டுமானத் தொழிலாளர்களுக்கு திறன்மேம்பாட்டு பயிற்சி மூலம் வருமானத்தை உயர்த்துவதற்காக, அவர்களுக்கு சிவில் பிரிவில் திறன்மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். இந்த ஆண்டில் 5,000 இளைஞர்களுக்கு (அ) கணக்கு நிர்வாகி; (ஆ) அனிமேட்டர்; (இ) ஒப்பனைக் கலைஞர்கள்; (ஈ) உள்ளூர் நுகர்வோர் சேவைப்பணி; (உ) செல்போன் தொலைத்தொடர்பு சேவை உதவி மேலாளர்; (ஊ) தகவல் தொழில்நுட்ப உதவியாளர்; (எ) தையல் கலைஞர்கள் ஆகிய

பணிப்பிரிவுகளில் திறன்மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். சமூகப் பாதுகாப்புச் சட்டம் மூலம், புதுச்சேரி அமைப்பு சாரா தொழிலாளர் சங்கத்தினை தன்னிறைவு அடைய சுயசார்பு கொண்ட தனிவாரியமாக மாற்றி, தானே வருமானம் ஈட்ட ஆவன செய்யப்படும். இதன்மூலம், புதுச்சேரி அமைப்பு சாரா தொழிலாளர்களும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு இணையாகப் பலவித பயன்களைப் பெறுவர். ஐம்பொன் கலைஞர்களுக்கு இந்த ஆண்டில் கொடையாக ₹ 10 இலட்சம் வழங்கப்படும்.

**உள்ளாட்சி**

**41.** புதுச்சேரி யூனியன் ஆட்சிப்பரப்பில் நகர்ப்புற பகுதிகளான புதுச்சேரி, உழவர்கரை, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் ஆகியவை திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. பொது மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கும் வகையில், நகரக புனரமைப்புத் திட்டத்தின்கீழ் (AMRUT) ரெயின்போ நகர் மற்றும் திருக்காஞ்சியில் ₹ 12.50 கோடி செலவில் தலா ஒரு R.O. Plant அமைக்கப்படும். Smart City திட்டத்திற்காக நடுவண் அரசு ₹ 100 கோடியை விடுவித்துள்ளது. இதற்கான திட்ட மேலாண்மை மற்றும் ஆலோசனை வழங்கும் திட்ட ஆலோசகர் (Project Consultant) தெரிவு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உச்சநீதிமன்ற

ஆணைப்படி, உள்ளாட்சி தேர்தலை விரைவில் நடத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஏற்கனவே அறிவித்தபடி சட்டமன்ற தொகுதி உறுப்பினர்களின் நிதியாக ₹ 2 கோடி இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுதொழில் மற்றும் வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை வளமாக்கும் பொருட்டு “தேசிய நகர்புற வேலைவாய்ப்புத் திட்டம்” (NULM) மற்றும் “முத்ரா” (Mudra) ஆகிய திட்டங்களின்கீழ் சுயதொழில் தொடங்குவதற்காக வங்கிகளின் மூலம் கடன் உதவி வழங்கப்படும். ஏரிகள் / குளங்கள் புனரமைப்பு மற்றும் புதிய மற்றும் சிறிய ஏரிகள் / குளங்கள் உருவாக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

**ஊரக வளர்ச்சி**

**42.** இவ்வாட்சிப்பரப்பில் வறுமையை நீக்கிடும் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் பல திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாத திட்டத்தின்கீழ், இந்த ஆண்டு 10 இலட்சம் மனித வேலைநாட்களை உருவாக்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின்கீழ் (NRLM), வட்டார அளவு கூட்டமைப்புகள் பலப்படுத்தப்பட்டு 180 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி அளிக்கப்படும்.

30 கிராம பஞ்சாயத்துக்களில் விவசாய தொழிலில் மகளிர் பங்களிப்பை ஊக்குவிக்கும் “மகிளா கிஸான் ஷஸ்திகரன் பரியோஜனா” என்ற திட்டம் அமல்படுத்தப்படும். தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் இவ்வாண்டு அனைத்து 98 கிராம பஞ்சாயத்துக்களும் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத பஞ்சாயத்துக்களாக மாற்றிட நடவடிக்கை எடுக்கப்படும். பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை அளித்து கிராம தொகுப்புகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மத்திய அரசின் ரூர்பன் (RURBAN) என்ற திட்டத்தின்கீழ், 2 குழுக்கள், புதுச்சேரி மாவட்டத்தில் பாகூர் மற்றும் காரைக்கால் மாவட்டத்தில் திருநள்ளார் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**காவல்**

**43.** இவ்வாட்சிப்பரப்பில் சட்டம்-ஒழுங்கை திறமையாகக் கையாண்டு, அமைதி நிலவுவதை உறுதி செய்ய எனது அரசு உறுதி பூண்டுள்ளது. அதன் பலனாக இந்தியாவில் 17 சிறிய மாநிலங்களில் புதுச்சேரி மாநிலம் சட்டம்-ஒழுங்கை காப்பதில் முதன்மையான மாநிலம் என்ற விருதை தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். உளவுத்துறையை வலுப்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு, கட்டுப்பாட்டு அறை மேம்பாடு,

உலகத் தரம் வாய்ந்த பயங்கரவாத மற்றும் வெடிகுண்டு தடுப்பு நடவடிக்கைகள், தானியங்கி போக்குவரத்து மேலாண்மை, காவலர்களுக்கு மேம்பட்ட பயிற்சி அளித்தல் ஆகிய ஒருங்கிணைந்த அம்சங்களை உள்ளடக்கிய “பாதுகாப்பான நகர திட்டத்தின்”கீழ், ₹ 50.75 கோடிக்கான ஒரு கருத்துரை மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ரெட்டியார்பாளையத்தில் புதிய காவல் நிலையம் கட்ட இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும். கோரிமேட்டில் காவல்துறை விருந்தினர் இல்லம் மற்றும் காரைக்காலில் படகுத்துறை (Jetty) கட்டி முடிக்கப்படும். காவல் துறையை வலிமைப்படுத்தும் வகையில் இந்த ஆண்டில் 44 உதவி ஆய்வாளர்கள், 390 காவலர்கள், 29 ஓட்டுநர்கள் மற்றும் 74 பிற தொழில்நுட்ப பணியாளர்கள் ஆகியோர் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**துறைமுகம்**

**44.** துறைமுக நடவடிக்கைகளை வணிக ரீதியாக மாற்றிட ஏதுவாக, இந்த ஆண்டு புதுச்சேரி துறைமுக வாயிலில் 2.70 இலட்சம் கனமீட்டர் அளவிற்கு தூர்வாரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை துறைமுகத்துடன் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்படி, புதுச்சேரி துறைமுகத்தில் வணிக ரீதியில் சரக்குகளை கையாளும் பணி தொடங்கப்படும்.

“சாகர்மாலா” என்னும் மத்திய அரசின் திட்டத்தின்கீழ், புதுச்சேரி துறைமுக மேம்பாட்டிற்காக ₹ 44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக மத்திய அரசிடம் இருந்து ₹ 18 கோடி நிதி ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் சுற்றுப்புறச்சூழல் தாக்க மதிப்பீடு விரைவில் செய்யப்பட்டு திட்டப் பணிகள் துவங்கப்படும்.

**பொதுப்பணிகள்**

**45.** நிதித் தட்டுப்பாடு நிலவிய போதிலும், எனது அரசு கடந்த ஆண்டில் பல்வேறு குடிநீர் திட்டங்கள் மற்றும் சாலைப்பணிகளை மேற்கொண்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். HUDCO நிதி உதவியுடன், குருமாம்பேட் மற்றும் ஜெயராம் நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில், சாலைகள் மற்றும் குடிநீர் குழாய்கள் அமைத்தல், மற்றும் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி ஆகிய பணிகள் முறையே ₹ 18.90 கோடி மற்றும் ₹ 23 கோடி செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இருப்புப்பாதை சந்திப்பிலிருந்து காமராஜ் சாலை வரையில், காரைக்காலில் வாய்க்காலை மேம்படுத்தும் பணி ₹ 20 கோடி செலவில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும். காரைக்கால் பகுதியில் திருநள்ளார் கொம்யூனில் ₹ 8 கோடி செலவில், அத்திப்படுகை, செருமாவிலங்கை மற்றும் அம்பகரத்தூர்

ஆகிய இடங்களில் மேல்நிலைத் நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் நீர் இறைக்கும் கருவி மற்றும் அதைச்சார்ந்த பணிகளும், ₹ 11 கோடி செலவில் காரைக்கால் திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே மணம்பட்டில் உள்ள படுகை அணை மறுகட்டுமானப் பணிகள், ₹ 6 கோடி செலவில், கோட்டுச்சேரி கொம்யூனில் கழுகுமேட்டில் கடைமடையில் உள்ள மதகின்கீழ் பெரிய வாய்க்கால்; மற்றும் கோழியூர் வாய்க்காலின் போக்கை நண்டலாறுக்கு மாற்றும் பணிகள், NABARD நிதி உதவியுடன் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும்.

**46.** பிரெஞ்சு மேம்பாட்டு முகவாண்மை (AFD) நிதி உதவியுடன், புதுச்சேரி நகரப் பகுதியில் குடிநீர் ஆதாரங்களை அதிகப்படுத்தவும், நீர் வழங்கும் முறைகளை மேம்படுத்தவும் இந்த ஆண்டு ₹ 50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. முத்தரையர் பாளையத்தில் உள்ள ஆயிகுளம் மற்றும் வாணரப்பேட்டையில் உள்ள பொறையாத்தம்மன் கோவில் குளம் முறையே ₹ 10 கோடி மற்றும் ₹ 9 கோடி செலவில் புனரமைக்கப்படும். வேல்ராம்பட்டில் உள்ள இன்ஜினியர்ஸ் காலனி மற்றும் உழவர்கரை நகராட்சியில் உள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் ஆகிய இடங்களில் ₹ 7.20 கோடி செலவில் கழிவுநீர் சேகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் நகரக புனரமைப்புத் திட்டத்தின்கீழ் (AMRUT) மேற்கொள்ளப்படும். பாகூர் கொம்யூன் கொம்மாந்தமேடு கிராமத்தில் பெண்ணையாற்றின் இரு கரைகளிலும் பாதுகாப்பு

கரை அமைத்தல் மற்றும் அணைக்கட்டில் உள்ள மீதப்பணிகள் ₹ 5 கோடி செலவில் NABARD வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும். வில்லியனூர், கோனேரிக்குப்பம் கிராமத்தில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே ₹ 35 கோடி செலவில் தடுப்பணை கட்டப்படும்.

**47.** ஏனாம் தரியலதிப்பா கிராமத்திற்கு பாசன நீர்வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு, அடிவிபோலன் வாய்க்காலை நடுவண் அரசு ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் ₹ 5.77 கோடி செலவில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி குபேர் சாலையில் ₹ 2 கோடி செலவில் காவலர் கூட்ட அரங்கு கட்டுதல் (Conference Hall), ₹ 1.20 கோடி செலவில் திருக்கனூர் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் ஆகிய கட்டுமானப் பணிகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும். தேவையான சட்ட அனுமதிகள் கிடைத்த பின்னர் ஊசுடு நீர்வழங்கும் திட்டத்தை அமல்படுத்த அனைத்து முயற்சிகளும் நடப்பாண்டில் எடுக்கப்படும். கிராமப்புறங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு முதலமைச்சர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராமப்புற சட்டமன்ற தொகுதிகளுக்கு தலா ₹ 50 இலட்சம் நிதி ஒதுக்கப்படும். தனியார் பங்களிப்புடன் 120 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் புதுச்சேரியின் பல்வேறு

பகுதிகளில் அமைக்கப்படும். பன்னித்திட்டிலிருந்து நரம்பை வரையிலான இணைப்புச்சாலைக்கு ₹ 38.73 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு இந்த ஆண்டு பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். புதுச்சேரி மாநிலத்தின் ஏனாம் பகுதியில் வெள்ளத்தடுப்பு நடவடிக்கைக்காக மத்திய அரசின் வெள்ளத்தடுப்பு மேலாண்மை திட்டத்தின்கீழ் வெள்ளத்தடுப்பு பணிகள் தொடங்க அனுமதி பெறப்பட்டுள்ளது. பணிகள் இந்த நிதியாண்டில் தொடங்கப்படும்.

**தொழில்கள்**

**48.** எனது அரசு, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தொழில் வளர்ச்சிக்கு இணக்கமான சூழலை உருவாக்க உறுதி பூண்டுள்ளது. 2016ஆம் ஆண்டு எனது அரசு அறிவித்துள்ள புதிய தொழிற்கொள்கையில், தொழில் முனைவோர்களுக்கு மூலதன முதலீட்டு மானியம், வட்டி மானியம், முத்திரை வரி விலக்கு, மின்கட்டண மானியம் என பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பிப்டிக் நிறுவனமானது ₹ 620 கோடி அளவிற்கு முதலீட்டை உள்ளடக்கிய 121 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து 183 ஏக்கர் நிலம், 17 தொழிற்கூடங்கள் மற்றும் 7 தொழில் மனைகளை ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்மூலம் 2,440 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும்.

**வருவாய்**

**49.** வெள்ளம், ஆழிப்பேரலை, புயல் முதலிய இயற்கைப் பேரிடர் பற்றிய முன் எச்சரிக்கை செய்யும் வசதிகள் தற்போது புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள கடலோர கிராமங்களுக்கு மட்டும் உள்ளன. இந்த வசதிகள் மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் உள்ள கடலோர கிராமங்களுக்கும் நீட்டிக்கப்படும். 2012ஆம் ஆண்டு ஏழை குடும்பங்களுக்கான ராஜீவ் காந்தி சமூகப் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ₹ 9 கோடி செலவில் 2,000 பயனாளிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படும். மாஹே மற்றும் ஏனாமில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பொருளடக்க பதிவேடு (Index Register) கணினி மயமாக்கப்படும். மணல் தட்டுப்பாட்டை போக்குவதற்காக ஏற்கனவே அரசால் முடிவுசெய்யப்பட்டு மணல் இறக்குமதி செய்வதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் மூலம் வெளிநாடுகளிலிருந்து மணல் இறக்குமதி செய்ய ஏதுவான சூழலை எனது அரசு ஏற்படுத்தி உள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் தனியார் மற்றும் அரசு நிலங்களில் உள்ள மணல்களை கண்டறிந்து பயன்படுத்துவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்காலில் கண்டறியப்பட்ட சுமார் 103 ஏக்கர் உபரி நிலங்கள் நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்டு மனைப்பட்டா வழங்குவதற்கும் மற்றும் அரசின் பொதுப்பயன்பாட்டுக்கு கொண்டு

வரவும் நடவடிக்கை எடுக்கப்படும். இதனடிப்படையில் நில உரிமையாளர்கள் மாற்று நிலம் கொடுப்பதற்கு முன்வந்தால் அதைப் பரிசீலித்து இவ்வரசு நடவடிக்கை எடுக்கும். புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் அரசால் கையகப்படுத்தப்பட்ட உபரி நிலங்கள் பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் இருப்பதை தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வந்துள்ளது.

**நில அளவை**

**50.** “டிஜிட்டல் இந்தியா நிலப்பதிவேடுகள் நவீனமயமாக்கல்” திட்டத்தின்கீழ் நில அளவைத் துறையில் உள்ள அனைத்து மரபுவழி ஆவணங்களும் புகைப்பட நகல் எடுக்கப்பட்டு (Scan) பாதுகாக்கப்படும். ETS மற்றும் GPS போன்ற நவீன கருவிகளைப் பயன்படுத்தி முன்னோடி மாதிரி திட்டமாக, அபிஷேகப்பாக்கம் மற்றும் ஒதியம்பட்டு ஆகிய வருவாய் கிராமங்களில் மறு அளவை செய்யப்படும். வரும் காலங்களில் இவ்வாட்சிப்பரப்பு முழுவதும் நவீன முறையில் நில அளவை மேற்கொள்ள தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள அளவை காலம் மேலும், ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும்.

**அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்**

**51.** சாலைப்பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாசுக்கேட்டை போக்கும் நடவடிக்கைகளை நீண்ட கால அடிப்படையில் மேற்கொள்ள, பெட்ரோல் மற்றும் டீசல் மீது வசூலிக்கப்படும் மதிப்புக்கூட்டல் வரி வசூலில் ஒரு சிறிய பங்கை ஒதுக்க எனது அரசு முடிவு செய்துள்ளது. இந்த நிதி, இவ்வாட்சிப்பரப்பில் வாகனப் போக்குவரத்தால் ஏற்படும் மாசுக்கேட்டையும், காற்றின் தரத்தை உயர்த்திடவும் பயன்படுத்தப்படும்.

**சமூக நலம்**

**52.** இவ்வாட்சிப்பரப்பில் உள்ள மக்களின் நலனில் குறிப்பாக நலிவடைந்த பிரிவினரின் நலனை உறுதி செய்வதில் எனது அரசு உறுதி பூண்டுள்ளது. இதன்படி, தற்போது சமூக நலத்துறையால் செயல்படுத்தப்படும் அனைத்து நலத்திட்டங்களும் முனைப்புடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இந்த ஆண்டு 363 புதிய மாற்றுத் திறனாளிகளுக்கு மாத ஓய்வூதியம் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதில் 38 பயனாளிகள் அட்டவணை இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

**நகர மற்றும் கிராம அமைப்பு**

**53.** அதிவிரைவு நகரமயமாதல் மற்றும் பல்வேறு ஊரகப்பகுதிகளிலிருந்து நகரப்பகுதிக்கு அதிக குடியேற்றம் மற்றும் நகரப்பகுதிகளின் திறட்சி ஆகியவற்றால் நகரப்பகுதிகளில் உள்ள நிலப்பயன்பாட்டை சீரமைக்க வேண்டியது அவசியமாகிறது. இதைக் கருத்தில் கொண்டு, புதுச்சேரிக்கான வரைவுப் பெருந்திட்டம் (Master Plan) அறிவிக்கப்பட்டு பொதுமக்களின் கருத்து கோரப்பட்டுள்ளது. கட்டட வரைபடத்திற்கான அனுமதி பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தைக் குறைக்கும் வகையில், விண்ணப்பங்களை கணினி மூலம் பரிசீலிக்க எனது அரசு உத்தேசித்துள்ளது. புதுச்சேரி அரசின் மூலம் வீடு கட்ட, அரசின் பல்வேறு திட்டங்களின் மூலம் நிதி உதவி பெறும் பயனாளிகள் கட்டட வரைபடத்திற்கான அனுமதி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுவார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளில் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின்கீழ் சுமார் 9,500 வீடுகள் கட்ட மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது. இதில் 3,000 வீடுகள் மத்திய மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் விரைவில் கட்டி முடிக்கப்படும். பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின்கீழ் உதவி பெறும் பயனாளிகள் தங்கள் வீட்டை தடையின்றி கட்டி முடிக்க ஏதுவாக தேவைப்படும் அதிகப்படியான நிதியை அளிக்க வங்கிகளின் கூட்டு முயற்சியுடன்

புதுச்சேரி அரசால் செயல்படுத்தப்பட்ட ‘PMAY Plus’ என்னும் சமூக வீட்டு வசதி கடன் திட்டம் நடுவண் அரசால் பாராட்டப்பட்டு புதுச்சேரி அரசுக்கு பிரதம மந்திரி விருது வழங்கப்பட்டுள்ளது.

**சுற்றுலா**

**54.** தென் இந்தியர்கள் மட்டுமின்றி அயல்நாட்டவர்களும் விரும்பி வருகை புரியும் சுற்றுலாத் தலமாக புதுச்சேரி திகழ்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருமித்த கருத்தோடு ஏற்றுக்கொள்வார்கள். நவீன பண்பாட்டுடன், புராதானமிக்க ஆன்மீகமும் கலந்த தனித்தன்மையுள்ள நகரமான புதுச்சேரி “இந்தியாவின் பிரான்ஸ்” ஆக திகழ்கிறது. இவ்வாட்சிப்பரப்பின் பொருளாதார வளர்ச்சிக்கு, சுற்றுலா தொழில்கள் முக்கிய பங்கை அளிக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை நம் மாநிலத்தில் அதிகரித்து வருகிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கும் குறிக்கோளுடன் கூடிய ஒரு திட்டத்தை தயார் செய்வதில் எனது அரசு கவனம் செலுத்தி வருகிறது. ஆலங்குப்பத்தில் நடைபெற்று வரும் சுற்றுலாத் திட்டப்பணிகள் இந்த ஆண்டு முடிவடையும். இந்த இடம் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. “சுதேசி தர்ஷன்” என்னும் திட்டத்தின் ஒரு பகுதியான “கடலோரச் சுற்றுலா” என்ற திட்டத்தின்கீழ், வரும் ஆண்டில் காலாப்பட்டு, மணப்பட்டு,

நரம்பை மற்றும் நல்லவாடு ஆகிய கடலோரக் கிராமங்களில் உள்ள கடற்கரைகள் மேம்படுத்தப்படும். சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு கோவா, கேரளா மற்றும் சிக்கிம் மாநிலங்களில் உள்ளது போன்று பல்வேறு மனமகிழ் திட்டங்களை செயல்படுத்தி அரசின் வருவாயைப் பெருக்க ஆவன செய்யப்படும். மேலும், மனமகிழ் சுற்றுலா, ஆன்மீக சுற்றுலா மற்றும் பாரம்பரிய சுற்றுலா ஆகிய திட்டங்களின் மூலம் சுற்றுலா வளர்ச்சிக்கான பல்வேறு பணிகள் ₹ 153 கோடி செலவில் புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் நடந்து வருகின்றன.

**போக்குவரத்து**

**55.** புதுச்சேரியில், ஏற்கனவே கையகப்படுத்தப்பட்ட 10 ஏக்கர் நிலப்பரப்பில், ஓட்டுநர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் நிறுவ எனது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதேபோல், காரைக்காலிலும் வட்டார ஓட்டுநர் பயிற்சி மையம் ஒன்றை அமைத்திட 3 ஏக்கர் பரப்பளவுள்ள அரசு நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ்விரு திட்டங்களும், சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்திலிருந்து கிடைக்கும் மத்திய நிதி உதவியுடன் அமல்படுத்தப்படும். வாகனங்களின் தரத்தை உறுதிசெய்யும் வகையில், ஆய்வு மற்றும் சான்றளித்தல் மையம் ஒன்று புதுச்சேரியில் ₹ 15.75 கோடி செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய நிதி உதவி

₹ 14.40 கோடியாகவும், மாநில நிதி ₹ 1.35 கோடியாகவும் இருக்கும். இதற்காக புதுச்சேரி அரசு, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் மற்றும் ARAI ஆகியோரிடையே 21-11-2017 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. காற்று மாசடைவதைத் தடுக்கவும், சுற்றுலாவை மேம்படுத்தவும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பேட்டரி மூலம் இயங்கும் நவீன இ-ரிக்ஷா அறிமுகப்படுத்தப்படும்.

**ஆதிதிராவிடர் நலம்**

**56.** "பாரத் ரத்னா ராஜீவ் காந்தி வீட்டுவசதி மானியம்" மற்றும் "பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம்" ஆகிய இரு திட்டங்களையும் ஒருங்கிணைந்த வீட்டுவசதி மானிய திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு அட்டவணை இனத்தைச் சேர்ந்த 2,000 பயனாளிகளுக்கு மானியம் அளிக்கப்படும். தற்போது ஆண்டு வருமானம் ₹ 2 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள அட்டவணை இனத்தைச் சேர்ந்த மணப்பெண்களுக்கு அளிக்கப்படும் திருமண உதவித் தொகை ₹ 75,000லிருந்து ₹ 1 இலட்சமாக உயர்த்தப்படும். மத்திய சமூக நீதி அமைச்சகத்தின்கீழ் செயல்படும் டாக்டர் B.R. அம்பேத்கர் அமைப்பு, கலப்புத் திருமணத்திற்கு அளிக்கும் உதவித்தொகை போலவே, கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதியர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி

₹ 1 இலட்சத்திலிருந்து ₹ 2.50 இலட்சமாக உயர்த்தப்படும். தற்போது தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வரும் புதுச்சேரி அட்டவணை இனத்து மேம்பாட்டு கழக நிர்வாக அலுவலகத்திற்கு அட்டவணை இன நலத்துறை வளாகத்திலேயே ஒரு புதிய கட்டடம் கட்டப்படும்.

**பிற்படுத்தப்பட்டோர் நலம்**

**57.** பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு அந்தந்த துறைகளுக்குத் தேவையான அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். மிகவும் பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக, பல்வேறு நலத்திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. சமூக-பொருளாதார முன்னேற்றத்திற்கு கல்வி அடிப்படைத் தேவை என்பதால், எனது அரசு பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் கல்வி மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு, இந்தச் சமுதாயத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு படிப்புதவித் தொகை, பரிசுகள், ஊக்கத்தொகை போன்ற உதவிகள் தொடர்ந்து அளிக்கப்படும். பிற்படுத்தப்பட்டோர் மக்கள் தொகை கணக்கெடுப்பு இந்த ஆண்டில் செய்து முடிக்கப்படும்.

## மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

**58.** இவ்வாட்சிப்பரப்பில் உள்ள மகளிர் மற்றும் குழந்தைகளின் நலன் மற்றும் மேம்பாட்டில் எனது அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது. மன அழுத்தம், மனச்சோர்வு ஆகியவற்றிலிருந்து இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் விடுபடும் வகையில், அவர்களுக்கு கலந்தாய்வு மையம் (Counselling Centre) ஒன்றை அமைக்க எனது அரசு உத்தேசித்துள்ளது. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் உள்ள கூடுதல் சத்துணவுத் திட்டத்தின்கீழ், குழந்தைகள், கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களிடையே உள்ள இரத்த சோகை நோய் பிரச்சனையை போக்கிடும் வகையில், தற்போது வழங்கப்படும் சமைத்த சூடான உணவுக்குப் பதிலாக சமைக்கத் தயாரான நுண்ணூட்டச் சத்துள்ள உணவை வாரத்தில் ஒரு நாள் அளிக்க எனது அரசு உத்தேசித்துள்ளது. முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியத்திற்காக நடப்பாண்டில் ₹ 365 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் கூடுதலாக 300 புதிய பயனாளிகளுக்கு, முதியோர் ஓய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யப்படும். இதற்காக கூடுதல் நிதி ஆதாரங்கள் திரட்டப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**59.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இந்த வரவு-செலவுத் திட்டம் பல சவால்கள் நிறைந்த சூழ்நிலையில் சமர்ப்பிக்கப்படுகிறது. எனினும், தரமான கல்வி, மருத்துவம், துப்புரவு மற்றும் தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் அனைத்து நலத்திட்டங்களுக்கும் போதுமான நிதி உதவி ஒதுக்கப்பட்டுள்ளது. குறைந்த அளவில் அளிக்கப்படும் மத்திய நிதி உதவி, மாநிலத்தின் குறைவான நிதி ஆதாரங்கள் ஆகியவற்றை கருத்தில்கொண்டு அரசின் நிதி நிலைமையை ஒன்று திரட்டி, அனைத்து திட்டங்களையும் நிறைவேற்ற எனது அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த முடிவுரையுடன், 2018-19ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை இப்பேரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பித்து, இதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் ஆதரவை நல்குமாறு வேண்டுகிறேன்.

***நன்றி !***

***வணக்கம் !!***

## தூய்மை-இந்தியா

## பசுமை-புதுச்சேரி

வடிவமைப்பு மற்றும் அச்சிட்டோர் : **அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி - 9**